சட்டமன்ற தேர்தல் 2026 -
களம் காணும் கழக வெற்றி வேட்பாளர்கள் !

அ.செ. வில்வநாதன்
(ஆம்பூர்)

டாக்டர் ராஜேஸ்வரி மோகன் காந்தி
கீழ்வைத்தினாங்குப்பம் (தனி)

ஏ.பி.நந்தகுமார்
(அணைக்கட்டு)

ப.கார்த்திகேயன்
(வேலூர்)

ஜெ.எல்.ஈஸ்வரப்பன்
(ஆற்காடு)

வினோத் காந்தி
(இராணிப்பேட்டை)

நித்யா சுகுமார்
(காஞ்சிபுரம்)

க.சுந்தர்
(உத்திரமேரூர்)

எஸ்.அமலு பொன்மலர்
மதுராந்தகம் (தனி)

எம்.கே.டி. கார்த்திக் தண்டபாணி
(செங்கல்பட்டு)

டாக்டர் ஆர்.எஸ்.கிருத்திகா தேவி
(தாம்பரம்)

தா.மோ. அன்பரசன்
(ஆலந்தூர்)

ச.அரவிந்த்ரமேஷ்
(சோழிங்கநல்லூர்)

தா.வேலு
(மயிலாப்பூர்)

ராஜா அன்பழகன்
(தியாகராயர் நகர்)

மா.சுப்பிரமணியன்
(சைதாப்பேட்டை)

ஏ.எம்.வி. பிரபாகர ராஜா
(விருகம்பாக்கம்)

நே.சிற்றரசு
(அண்ணா நகர்)

டாக்டர் எழிலன் நாகநாதன்
(ஆயிரம் விளக்கு)

பி.கே. சேகர்பாபு
(துறைமுகம்)

டாக்டர் சுபேர்கான்
(இராயபுரம்)

தமிழன் பிரசன்னா
எழும்பூர் (தனி)

கே.எஸ்.ரவிச்சந்திரன்
திரு.வி.க. நகர் (தனி)

கார்த்திக் மோகன்
(வில்லிவாக்கம்)

ஆர்.டி. சேகர்
(பெரம்பூர்)

ஜே.ஜே.எபினேசர்
(டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர்)

எஸ்.சுதர்சனம்
(மாதவரம்)

டாக்டர்.அ.பு.பூர்ணிமா
(அம்பத்தூர்)

காரம்பாக்கம் க.கணபதி
(மதுரவாயல்)

ஆவடி சா.மு.நாசர்
(ஆவடி)

ஆ.கிருஷ்ணசாமி
(பூந்தமல்லி)

வி.ஜி.ராஜேந்திரன்
(திருவள்ளூர்)

டி.ஜெ.கோவிந்தராஜன்
(கும்மிடிப்பூண்டி)

வெல்வோம் இருநூறு! படைப்போம் வரலாறு!
ஸ்டாலின் தொடரட்டும்! தமிழ்நாடு வெல்லட்டும்!

பொள்ளாச்சி தொகுதி வேட்பாளர்
நித்தியாநந்தனை ஆதரித்து வாக்கு சேகரிப்பு!
ஆதிதிராவிடர் நலக்குழு திப்பம்பட்டி ஆறுச்சாமி தலைமையில் கழகத்தினர் மேற்கொண்டனர்!

கோவை, மார்ச் 30 - பொள்ளாச்சி தொகுதி காட்டம்பட்டிபுதூர் கிராமத்தில் அருந்ததியர் சமுதாய மக்களிடத்தில் நேற்று முன்தினம் தி.மு.க. கூட்டணி கட்சி பொள்ளாச்சி தொகுதி வெற்றி வேட்பாளர் நித்தியானந்தனை ஆதரித்து உதயசூரியன் சின்னத்தில் கழக மாநில ஆதி திராவிடர் நலக்குழு இணைச் செயலாளரும், தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய தலைவருமான திப்பம் பட்டி வெய. ஆறுச்சாமி திண்ணை பிரச்சாரம் மேற்கொண்டு வாக்கு சேகரித்தார்.

இந்நிகழ்ச்சியில் காட்டம்பட்டி கிளை கழக செயலாளர் ரமேஷ், கிணத்துக்கடவு வடக்கு ஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினர் விவேகானந்தன், முன்னாள் வார்டு உறுப்பினர் கேபிள் சக்தி, ஜக்கார்பாளையம் கிளை கழக செயலாளர் காளிமுத்து, காட்டம்பட்டி கழக நிர்வாகிகள் முருகேசன், மயில்சாமி, ஜக்கார்பாளையம் கிளை இளைஞரணி அமைப்பாளர்கள் ஸ்ரீதரன், தினகரன் மற்றும் ஊர் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி செயல்வீரர்கள் கூட்டம் அன்னை வேளாங்கண்ணி கலைக் கல்லூரி கலையரங்கத்தில் தி.மு.கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பகுதி கழக செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் அனைத்துக் கட்சி மாவட்ட தலைவர் மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், தி.மு.கழக நிர்வாகிகள், தோழர்கள் கலந்து கொண்டனர்.

தலைமைத் தேர்தல் ஆணையர் பதவி நீக்க நோட்டீஸ்!
ஜனநாயகத்தை பா.ஜ.க. கேலிக்கூத்தாக்கி வருகிறது!
திரிணாமுல் காங்கிரஸ் கட்சி புகார்!

கொல்கத்தா, மார்ச் 30 - தலைமை தேர்தல் ஆணையர் பதவி நீக்க நோட்டீஸ் விவகாரத்தில் நாடாளுமன்ற ஜனநாயகத்தை பாஜக கேலிக்கூத்தாக்கி வருவதாக திரிணாமுல் காங்கிரஸ் கட்சி புகார் தெரிவித்துள்ளது.

தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று 193 எம்.பி.க்கள் கையெழுத்திட்ட இம்பீச்மெண்ட் நோட்டீஸ், கடந்த 12ம் தேதி விதி முறைகளின்படி மக்களவை, மாநிலங்களவை செயல கங்களில் வழங்கப் பட்டது. இரண்டு வாரங்கள் கடந்தும் அந்த நோட்டீஸ் மீது இது வரை எந்த நடவடிக்கையும் இல்லை. இதற்கு திரிணாமுல் காங்கிரஸ் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 2ம் தேதி நாடாளுமன்றம் ஒத்தி வைக்கப்பட உள்ள நிலையில், அதற்குள் பதவி நீக்க நோட்டீஸ் குறித்து விவாதிக்கப்படுமா என்பது சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளதாக திரிணாமுல் காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது. தலைமைத் தேர்தல் ஆணையர் பதவி நீக்க தீர்மான நோட்டீசை, ஏற்பதாக அறிவிக்க வேண்டும், இல்லாவிட்டால் நிராகரிப்பதாக அறிவிக்க வேண்டும் என்றும், ஆனால், எது வும் கூறாமல் சபாநாயகர் மௌனமாக இருப்பது ஏன்? என்று திரிணாமுல் காங்கிரஸ் கட்சி கேள்வி எழுப்பி உள்ளது.

அரசுக்கும் தேர்தல் ஆணையத்துக்கும் இடையே ரகசிய உடன்பாடு உள்ளதா? இல்லை வெளிப்படையான உடன்பாடு உள்ளதா? என்று மாநிலங்களவை திரிணாமுல் காங்கிரஸ் குழுத் தலைவர் டெரிக் ஓ பிரையன் கேள்வி எழுப்பி உள்ளார். நாடாளு மன்ற இரு அவைகளின் செயலங்களும் இது வரை நோட்டீஸ் குறித்து எதுவும் தெரிவிக்காதால், சட்டபூர்வமான நாடாளுமன்ற நடவடிக்கையை கூட அனுமதிக்காமல் ஒன்றிய பாஜக அரசு நாடாளுமன்றத்தை கேலிக் கூத்தாக்கி வருவதாக டெரிக் ஓ பிரையன் குற்றம்சாட்டியுள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த அன்னமங்கலம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற ஆண்டு விழா நிகழ்ச்சியில் பல்வேறு துறைகளில் முதலிடம் பிடித்த மாணவ மாணவிகளுக்கு முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ சான்றிதழ்களை வழங்கினார். நிகழ்வில் கல்லூரி நிறுவனர் அஞ்சாஞ்சேரி கணேசன், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், கல்லூரி தலைவர் அரசு வழக்கறிஞர் கிருஷ்ணன், துணைத் தலைவர் வழக்கறிஞர் பரமசிவம், கல்லூரி முதல்வர் ஹரிகுமார் ஆகியோர் பங்கேற்றனர்.